**கடற்றொழில் வெகுமதி நிதியம் - 2016**

கடற்றொழில் வெகுமதி நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1996 இன் 2 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீர்வள அதிகாரச் சட்டத்தின் 59(5) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்தாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) மற்றும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உளளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கிறாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற் கொள்ளவில்லை. முகாமைத்துவதத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை, கடற்றொழில் வெகுமதி நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1996 இன் 2 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீர்வள அதிகாரச்சட்டத்தின் 59(4) ஆம் உபபிரிவு | தகவல்களை வழங்குபவர்களுக்கு வெகுமதிப் பணம் வழங்குவதற்காக முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04:3 ஆம் பிரிவு | நிதியத்தின் நிதிக்கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவு ரூபா 1,253,095 ஆன மிகையாக இருந்ததுடன், இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகையானது ரூபா 1,865,239 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 612,144 ஆன வீழ்ச்சிக்காக அரசுடமையாக்கப்பட்ட பொருட்களின் விற்பனையால் பெறப்பட்ட வருமானம் ரூபா 2,499,231 இனால் அதிகரித்திருந்த போதிலும் சுற்றிவளைப்புக்களுக்காக பங்களித்த உத்தியோகத்தர்களுக்கு படிகள் செலுத்துதல் ரூபா 3,111,376 இனால் அதிகரித்தமை விஷேடமாகத் தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

இலங்கையில் மீன்பிடித் தொழிலையும் நீர்வளத்தையும் முகாமைத்துவம் செய்தல், முறைமைப்படுத்துதல், காப்புறுதி செய்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்காக ஏற்பாடுகளைத் திட்டமிடல் 1996 இன் 2 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீர்வள

அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களாகும். அதிகாரச்சட்டத்தின் 59(3) ஆம் பிரிவின் பிரகாரம் 51(4) உப பிரிவில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் அரசுடமையாக்கப்பட்ட மீன்கள் மற்றும் கடற்றொழில் உபகரணங்களின் விற்பனையால் கிடைக்கின்ற பணம், கடற்றொழில் வெகுமதி நிதியத்திற்கு செலவு வைக்கப்படுகின்றது. அதிகாச்சட்டத்தின் 5 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏதாவது கட்டளையை மீறுதல் தொடர்பான சுற்றிவளைப்புக்களைச் செய்கின்ற உத்தியோகத்தர்களுக்கும் தகவல்களை வழங்குபவர்களுக்கும் வெகுமதிப் பணத்தை வழங்குவதற்காக இந்த நிதியதம் பேணிச் செல்லப்படுகின்றது.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

சுற்றிவளைப்புக்களில் பங்குபற்றுகின்ற உத்தியோகத்தியோகத்தர்களுக்கு வெகுமதிப் பணம் வழங்குதலை தாமதப்படுத்த வேண்டியிருந்ததால் 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் முறையே 271, 348 மற்றும் 488 வழக்குத் தாக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2015 மற்றும் 2016 ஆண்டுகளில் 05 வழக்குத்தாக்கல்களுக்காக புத்தளம் மாவட்டத்தின் 64 உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் ரூபா 3,826,125 தொகையான நன்கொடைகளைச் செலுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் உத்தியோகத்தர்களுக்கு வெகுமதிப்பணம் வழங்குவதற்காக குறித்த திட்டமொன்று காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

கடற்றொழில் வெகுமதி நிதியத்திற்குரிய உள்ளகக் கணக்காய்வு பரிசோதனைகளிலிருந்து நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் வழுக்களை இழிவுபடுத்தி முறையான முகாமைத்துவ முறைமையொன்றைக் கட்டியெழுப்புவதற்காக மீளாய்வாண்டில் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் போது நன்கொடை நிதியம் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) புத்தகங்களைப் பேணிச் செல்லல் | சுற்றிவளைப்புக்கள் தொடர்பான தகவல்களின் பதிவேடொன்று பேணப்படாதிருந்தமையால் 2016 ஆம் ஆண்டில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பாக திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்கள் தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. |
| (ஆ) உத்தியோகத்தர்களுக்கு வெகுமதிப் பணம் செலுத்துதல் | வெகுமதிப் பணத்தைச் செலுத்தும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்காக தேவையான முறைமையொன்று தயாரிக்கப்படாமை. |